DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.

| | |
|---|---|
| Case No. | CC . 121/2012 |
| Deposition of Witness for | Prosecution PW 2 |
| Name | ஆரோக்கியசாமி |
| Father / Husband Name | பெஞ்சமின் |
| Village | |
| Taluk | தளிர்தலை |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 08th May 2024.

---

**( 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்).**

**(4 முதல் 9 எதிரிகள் ஆஜரில்லை. 4 முதல் 9 எதிரிகள் தரப்பில் குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது)**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:–**

1) எனது மனைவியின் பெயர் என்னவென்றால் சகாயமேரி. அவர் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனுவின் விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். எனது மனைவி தாக்கல் செய்துள்ள மனுவில் உள்ள சங்கதிகளைத் தான் எனது பிரமாண வாக்கமூலத்தில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். இந்த மனுவை நீதிமன்றத்தில் வைத்து தான் தயார் செய்தேன் என்றால் ஆமாம். இங்கு வைத்து தான் தட்டச்சு

செய்தோம். பெஞ்சமின் மகன் மனோகரன் எனக்கு என்ன உறவு என்றால் அண்ணன். 2 வது எதிரி எனது அண்ணனின் மனைவி. எங்களது ஊரில் மோசஸ் மகன் பாண்டி இருக்கிறாரா என்றால் ஆமாம். எனது மனைவி சகாயமேரி மீது காளையார்கோவில் காவல் நிலையத்தில் சூசைமேரி என்பவர் கொடுத்த புகாரில் எனது மனைவியுடன் நான் விசாரணைக்கு ஆஜர் ஆனேனா என்றால் இல்லை.

2) கடந்த 2016 ம் ஆண்டு SP அலுவலகத்தில் சூசைமேரி கொடுத்த புகாரின் அடிப்படையில் விசாரணைக்கு நாங்கள் சென்றோமா என்றால் இல்லை. எனது மனைவி நடத்தி வந்த குங்குமம் மகளிர் குழுவில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. குங்குமம் மகளிர் குழுவில் எவ்வளவு தொகை கடனாகப் பெறப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

3) பிரமாண வாக்கமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் குறித்து எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் தெரியாது. எனக்கும் எனது சகோதரருக்கும் என்ன முன் விரோதம் உள்ளது என்று பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மனைவி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது தொடர்பாக அவருடன் நானும் காவல் நிலையத்திற்கு சென்றேனா என்றால் ஆமாம். காவல் நிலையத்திற்கு செல்லும் போது புகாரை எழுதி எடுத்துக் கொண்டு தான் சென்றோம். அதற்கு காவல் நிலையத்தில் மனு ரசீது கொடுத்தார்களா என்றால் இல்லை.

4) நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றாலும் அதனால் தான் எங்களுக்கு மனு ரசீது வழங்கப்படவில்லை என்றாலும் சரியல்ல. குங்குமம் மகளிர் குழுவில் தளிர்தலையில் உள்ள கோமதி என்ற நபர் உறுப்பினராக உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். மேற்படி கோமதி என்ற நபரின் பணத்தை எனது மனைவி மோசடி செய்ததாக என்னிடம் சொல்லியதற்கு நானும் எனது

மனைவியும் சேர்ந்து கோமதியை அடித்து சம்பந்தமாக கோமதி கொடுத்த புகாரின் அடிப்படையில் காளையார்கோவில் காவல் நிலையத்திலிருந்த அழைத்த விசாரணைக்காக நானும் எனது மனைவியும் சென்றோமா என்றால் இல்லை. விசாரணைக்கு ஆஜர் ஆனோம் என்றாலும் அதை மறைத்து இந்த வழக்கில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5) எங்களது ஊரில் எத்தனை குடும்பங்கள் உள்ளது என்றால் சரியாகத் தெரியவில்லை. எனது சொந்த ஊர் எது என்றால் தளிர்தலை. கடந்த 05.06.2008 ம் தேதியன்று நான் எங்கிருந்தேன் என்றால் ராமநாதபுரத்தில் வேலைக்காக சென்றிருந்தேன். வேலை முடித்து இரவு 10.00 மணிக்குத் தான் வீட்டிற்கு வந்தேன். என்னிடம் இருசக்கர வாகனம் உள்ளதா என்றால் இல்லை. நான் முதல் விசாரணை சாட்சியத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்துமே எனது மனைவி சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். எனது மனைவி மகளிர் குழுவில் கடன் வாங்கி அதை திருப்பி செலுத்தாது குறித்து வங்கியிலிருந்து அனுப்பப்பட்ட அறிவிப்பு குறித்து எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது.

6) நானும் எனது மனைவியும் எங்களது வங்கி வரவு செலவுக் கணக்குகளை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக எங்கள் ஊரில் உள்ள மற்ற நபர்களுக்கு தெரியும் என்று புகாரிலும் சாட்சியத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். என்னை ஆம்னி வேனில் கடத்தி சென்றுவிட்டதாக எனது மனைவி கொடுத்த புகாரின் பேரில் விசாரணை நடைபெற்றதா என்றால் இல்லை. எனது மனைவி கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மனைவி தான் குங்குமம் மகளிர் குழுவிற்கு கிடைத்த கடன் தொகைகளையும் உறுப்பினர்கள் கட்டிய பணத்தையும் மோசடி செய்துள்ளார் என்றால் சரியல்ல. அதிலிருந்து தப்பிக்க வேண்டியும் எனது மனைவி கொடுத்த பொய் புகார் என விசாரணையில் தெரிய வந்ததால் அந்த புகார் கொடுக்கப்பட்டது என்றாலும் வங்கியில்

செலுத்த வேண்டிய கடன் தொகையை செலுத்தமால் இருப்பதற்காக இந்தப் பொய் புகாரை தாக்கல்
செய்துள்ளார் என்றால் சரியல்ல.

7) சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரிகளால் எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் எதிரிகள் எங்களது ஆடுகளை எடுத்துச் செல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனது மனைவி புகாரில் சொல்லியுள்ளது போன்று எந்த வழக்கு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல.

**(ஒம்)திருமதி.J.அனிதா கிறிஸ்டி, 08.05.2024**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**சிவகங்கை.**

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 1,
**சிவகங்கை.**